DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | C.C. No. 250 of 2022<br>CNR No.TNKI02-004032-2022 |
| Deposition of witness for | : | PW3 |
| Name | : | திரு. லட்சுமிபதி |
| Father's Name | : | பாலகொண்டையர் |
| Village | : | பலேரிபள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Calling | : | PW3 |
| Religion | : | Hindu |
| Profession | : | கோவில் பூசாரி |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of November 2022.

<u>முதல் விசாரணை :-</u>

நான் பலேரிபள்ளியில் குடியிருந்து கோவில் பூசாரியாக இருந்து வருகிறேன். எனக்கு சம்பவ தேதி ஞாபகமில்லை. 2 வருடத்திற்கு முன்பு செப்டம்பர் மாதம் என்று நினைக்கிறேன். காலை 6.00 முதல் 7.30 மணிக்குள் தளவாய்பள்ளி கோவில் முன்பு சத்தம் வந்தது. அப்போது நான் சென்று பார்த்தேன். அப்போது ஒரு ஈச்சர் வண்டி ஒரு ஸ்கூட்டி வாகனத்தின் மீது ஏறியிருந்தது. நான் பார்த்த போது வண்டியின் ஓட்டுனர் அங்கு இல்லை. இருசக்கர வாகனத்தில் வந்த நபர் வண்டியின் உள்ளே மாட்டிக்கொண்டிருந்தார். இருசக்கர வாகனத்தில் இருந்த இருவரையும் வெளியே இழுத்து பார்த்தேன்.

அவர்களுக்கு பேச்சு மூச்சு எதுவும் இல்லை. நான் உடனே ஆம்புலென்ஸ்க்கு போன் செய்துவிட்டேன். பிறகு காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்துவிட்டேன். அதன் பிறகு ஆம்புலென்ஸ் வந்தது, அதில் அவர்களை ஏற்றி அனுப்பிவிட்டு, நான் அங்கிருந்து கிளம்பிவிட்டேன். இதுகுறித்து காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

விபத்தில் இறந்தவரும், நானும் பக்கத்து ஊர்காரர்கள் என்றால் சரிதான். விபத்து நடந்து சுமார் 5 – 10 நிமிடம் கழித்து அங்கு சென்று நான் பார்த்தேன். இந்த விபத்து யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று எனக்கு தெரியாது. விபத்தின் போது யார் வாகனத்தை ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியாது.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 250 of 2022<br>CNR No.TNKI02-004032-2022 |
| Deposition of witness for | : | PW4 |
| Name | : | திரு. சரவணகுமார் |
| Father's Name | : | ராஜேந்திரன் |
| Village | : | சீலேபள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Calling | : | PW4 |
| Religion | : | Hindu |
| Profession | : | விவசாயம் |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of November 2022.

<u>முதல் விசாரணை :-</u>

நான் சீலேபள்ளியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 2020 ம் ஆண்டு சம்பவம் நடந்தது. மாதம், தேதி, நேரம் ஞாபகமில்லை. போலீசார் வரைபடம் வரைந்து ஊரில் வந்து கையெழுத்து போடச்சொன்னார்கள். நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.1 ஆகும்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

போலீசார் வெள்ளை தாளில் கையெழுத்து போடசொன்னார்கள், போட்டேன், அதில் என்ன இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது.

மறு விசாரணை :-

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | C.C. No. 250 of 2022<br>CNR No.TNKI02-004032-2022 |
| Deposition of witness for | : | PW5 |
| Name | : | திரு. ராமமூர்த்தி |
| Father's Name | : | நடராஜன் |
| Village | : | சீலேபள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Calling | : | PW5 |
| Religion | : | Hindu |
| Profession | : | மண்பாண்ட வியாபாரம் |
| Age | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of November 2022.

முதல் விசாரணை :-

நான் சீலேபள்ளியில் குடியிருந்து, மண்பாண்ட வியாபாரம் செய்து வருகிறேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. காவல் துறையினர் வரைபடம் வரைந்தார்கள், என்னிடம் ஒரு கையெழுத்து போடசொன்னார்கள், நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

போலீசார் என்னிடம் வெற்று தாளில் கையெழுத்து போடசொன்னார்கள், நான் கையெழுத்து போட்டேன், அதில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

S RAJASIMMAVARMAN

CHIEF JUDICIAL MAGISTRATE
Digitally signed by S RAJASIMMAVARMAN
DN: cn=S RAJASIMMAVARMAN, ou=KRISHNAGIRI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

தலைமை குற்றவியல் நடுவர்,

கிருஷ்ணகிரி.